(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தினைச் சேர்ந்த முல்லையூர் கிராமம், கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு அரியலூர், செந்துறை, வேப்பூர் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள ஆய்வு செய்யப்பட்டு, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்மிகு பேரவைத் தலைவர்: திரு. குரு, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

258—

பாதாளச் சாக்கடை

•35136—திரு. எஸ்.எம். சீனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை கட்டித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் தொகுதி, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த பேரூராட்சியின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை. ஆகையால் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை

2003 ஏப்ரல் 11]

அறிக்கையில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்குத் தரமான குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், சாலை மேம்படுத்துதல் போன்ற திட்டங்களுக்கு ரூபாய் 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திருநகர் பேரூராட்சி சுமார் 15,500 வாக்காளர்களைக் கொண்ட பகுதியாகும். கழிவு நீர் அகற்றுவதற்குச் சரியான திட்டம் இல்லாததால் நிலத்தடி நீர் மாசுபடுகின்றது. தொற்று நோய் பரவும் நிலை ஏற்படுகின்றது. மேலும், அரசு சொல்லக்கூடிய நிதியை ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் கட்டுவதற்குத் தயாராக உள்ளார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 200 கோடி ரூபாய் நிதியொதுக்கத்தில் திருநகர் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தினையும் எடுத்துக்கொள்ள அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, தாயுள்ளம் கொண்ட அம்மாவின் பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு குறைந்தபட்சம், ரூ.2 கோடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 20 சதவீதம் அந்தப் பேரூராட்சியினுடைய பொதுமக்கள் பங்களிப்பாகத் தருவதற்கு முன்வந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி நிதிநிலைமை இச்செலவினத்தை ஏற்கும் நிலையில் இல்லை. அதோடு மட்டுமல்லாமல், தமிழக அரசால் நிதியொதுக்கீடு செய்ய இயலாத நிலையில், தற்போது நகர்ப்புற பேரூராட்சியிலிருந்து 100 சதவீத பங்களிப்புத் தொகையும் முழுமையாக, பயனாளிகள் வாயிலாகக் கொடுத்தால் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்த இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]